INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

## PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 25 May 2023
நேரம் : 12:01 AM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்
மின்னஞ்சல்: dalreen `at’ ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at’ ihp.lk Twitter: @ravirannaneliya

# என்.பி.பி./ஜே.வி.பி. முன்னிலையை தக்க வைத்துக்கொள்கிறது, ஆனால் யூ.என்.பி. மற்றும் பிற கட்சிகளுக்கு தன் ஆதரவை இழந்தது, அதே சமயத்தில் எஸ்.ஜே.பி. தேக்கமடைந்தது

*IHP MRP பொது தேர்தல் வாக்காளர் தீர்மானம் புதுபிப்பு ஏப்ரல் 2023*

சமீபத்திய ஏப்ரல் 2023 இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்படி (SLOTS), என்.பி.பி./ஜே.வி.பி.க்கு வாக்களிக்கக்கூயவர்கள் மத்தியில் அவர்களுக்கான ஆதரவு 8 புள்ளிகள் குறைந்து 32% ஆனபோதிலும், மாற்றமில்லாத 30% ஆதரவு உடைய எஸ்.ஜே.பி. யோடான தனது சாதக இடைவெளியை தக்கவைத்துக்கொண்டது. மூன்று புள்ளிகள் பெற்று 9%ற்கு சென்ற யூ.என்.பி.க்கும் மூன்று புள்ளிகள் பெற்று 14%ற்கு சென்ற மற்ற சிறிய கட்சிகளுக்கும் இந்த ஆதரவு சென்றது போல் தெரிகிறது. பிப்ரவரி முதல் யூ. என்.பி.யின் ஆதரவில் ஒரு மீட்பை சமீபத்திய கருத்துக்கணிப்பு உறுதி செய்கின்றது, ஆனால் இது பெரும்பாலும் என்.பி.பி./ஜே.வி.பி. இழந்ததை வைத்துதானே ஒழிய எஸ்.ஜே.பி.யின் இழப்பினால் அல்ல.

## பொது தேர்தல் பற்றிய வாக்களிப்பு தீர்மானம், ஏப்ரல் 2023
(அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)
இன்று பொதுதேர்தல் நடந்தால், நீங்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?





**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஏப்ரல் 2023 இல் நடத்தப்பட்ட 580 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ். 31 2021- மே 19 2023 வரை நடத்தப்பட்ட 11,368 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பீடுகள் கணக்கிடப்பட்டன. MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மதிப்பீடுகளிற்கான பிழை விளிம்பு 1-5% என்று மதிப்பிடப்பட்டது.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

என்.பி.பி./ஜே.வி.பி.யுடன் ஒப்பிடும் பொழுது வாக்காளர் உற்சாகத்தில் சாதக இடைவெளி எஸ்.ஜே.பி.க்கு தொடர்ந்தது. இது மொத்த வாக்காளர்களுடன் ஒப்பிடும்போது வாக்களிக்ககூடியவர்களிடையே என்.பி.பி./ஜே.வி.பி.யின் முன்னணியை 3% குறைத்துவிட்டது.

## **IHP SLOTS** பொது தேர்தல் வாக்களிப்பு தீர்மானம் தொடரி
(அநேகமாக வாக்களிக்கக்கூடியவர்கள் %)
இன்று பொதுதேர்தல் நடந்தால், நீங்கள் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?




**சுகாதார கொள்கை நிறுவனம் இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வு MRP**
ஆகஸ். 31 2021- மே 19 2023 வரை நடத்தப்பட்ட 11,368 மொத்த நேர்காணல்களின் அடிப்படையில் மாதாந்திர மதிப்பீடுகள். MRP மாதிரி கொண்டு மதிப்பீடுகள் கணிக்கப்பட்டன மேலும் மாதம் மற்றும் கட்சியைப் பொருத்து மதிப்பீடுகளின் பிழை விளிம்பு 1-8% என்று மதிப்பிடப்பட்டது.

IHP INSTITUTE FOR HEALTH POLICY

இங்கும் அங்குமாக மிதந்துக்கொண்டிருந்த வாக்காளர்களில் பெரும்பாலானோர் முன்னாள் எஸ்.எல்.பி.பி. வாக்காளர்கள் என்பதை 2022 கடைசி முதல் காணப்படும் போக்குகள் தொடர்ந்து சுட்டிக்காட்டுகின்றன. இவர்கள் தொடர்ந்து என்.பி.பி./ஜே.வி.பி. மற்றும் யூ.என்.பி.க்கு இடையே ஊசலாடிக்கொண்டிருக்கின்றனர்.

அநேகமாக சமீபத்திய சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திலிருந்து யூ.என்.பி. பயனடைந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துவதோடு, பெருபான்மை பயன் என்.பி.பி./ஜே.வி.பி.யின் இழப்பினால்தான் என்பதை ஏப்ரல் கருத்துக்கணிப்பு உறுதிபடுத்துகிறது என்று SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மற்றும் IHPன் நிர்வாகப் பணிப்பாளருமான வைத்தியர் ரன்னன்-எலிய கருத்து தெரிவித்தார்.

கடந்த வருட எஸ்.ஜே.பி. க்கான ஆதரவின் ஸ்திரத்தன்மை மொத்த வாக்காளர்களில் நான்கில் ஒருவர் அவர்களுக்கு விசுவாசமாக இருக்கின்றார்கள் என்பதனை குறிக்கின்றது எனவும், ஆனால் எஸ்.ஜே.பி.யானது அதற்கு மேலாக தனது ஆதரவை அதிகரித்துக்கொள்ள சிரமப்படுகிறது எனவும் அவர் கருத்துரைத்தார்.

## முந்தைய அறிக்கைகள் ihp.lk விலிருந்து கிடைக்கும்


Institute for Health Policy, January 2023, “IHP MRP Voting Intentions Estimates January 2023. NPP/JVP and SJB running neck-and-neck amongst voters, but no party dominates”, SLOTS Report #2023-03.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202303.pdf*

Institute for Health Policy, February 2023, “IHP MRP Voting Intentions Estimates February 2023. Voters consolidate around the NPP/JVP, SJB and ITAK, with NPP/JVP taking a clear lead”, SLOTS Report #2023-06.
*Available at: https://ihp.lk/publications/docs/SLOTSReport202306.pdf*

Institute for Health Policy, March 2023, “Little change in voting preferences in March, with NPP/JVP maintaining a clear lead over SJB, amidst possible signs of a UNP rise. IHP MRP General Election voting intentions update March 2023”, IHP Press Release #2023-11.

*Available at: https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230419.pdf*


### IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்கானல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression and Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்தது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மையை மதிப்பிட, multiple imputation என்னும் தரவு கணிப்புமுறையை பயன்படுத்துவதோடு, குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பதை மதிப்பீடு செய்ய அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்துகிறது. இம்பியூடேஷன் (Imputation) என்பது தவறிய, தவறான அல்லது சீரற்ற தரவுகளுக்கு மாற்று மதிப்புகளை ஒதுக்கப் பயன்படும் செயல்முறையாகும்.

2023 ஏப்ரல் மாததிற்கான MRP மதிப்பீடுகள் ஏப்ரல் 2023 ல் நடத்தப்பட்ட 580 நேர்காணல்கள் மற்றும் ஆகஸ்ட் 31 2021 - மே 19 2023 வரை நடத்தப்ட்ட 11,368 நேர்காணல்களின் மொத்தத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டது. பிழை விளிம்பு என்.பி.பி./ஜே.வி.பி., எஸ்.ஜே.பி., யூ.என்.பி. மற்றும் எஸ்.எல்.எப்.பி., 4–5% என்றும் மற்ற கடிசிகளுக்கு 1–3% என்றும் மதிப்பிடப்பட்டது. இந்த ஏப்ரல் புதுபிப்பு முந்தைய பதிவைவிட சமீபத்திய தரவினை பயன்படுத்துவதால் முந்தைய மாதங்களுக்கான வாக்கு பங்கு மதிப்பீட்டில் சிறிய மாற்றங்கள் உள்ளன. stochastic simulation என்னும் உருவகப்படுத்துதல் முறை பயன்படுத்தப்பட்டது. உருவகப்படுத்துதல் 30 இல் இருந்து 100க்கு அதிகரிக்கபட்டதனால் வாக்காளர் பங்கின் மதிப்பீடு மற்றும் பிழை விழிம்பின் மதிப்பீட்டின் துள்ளியம் சிறிதளவு மேம்பட்டது.

MRP என்பது மற்ற நாடுகளில் உள்ள வாக்கெடுப்பு நிறுவனங்களால் சிறிய கூறுகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒரு முறையாகும். குறிப்பாக YouGov, UK Brexit வாக்கெடுப்பு மற்றும் சமீபத்திய UK பொதுத் தேர்தல்களின் முடிவுகளை முன்னறிவிக்கப் பயன்படுத்தியது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, பொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

## நிதியுதவி

இலங்கையில் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் மற்றும் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம் (The Asia Foundation) மற்றும் ஏனையோர் SLOTS ஆய்விற்கு

நிதியுதவி அளித்துள்ளனர். ஆனால் ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.